10.08.2026

O.S.No. **284/2017**

DW1- **செல்லதுரை – த/பெ அய்யாச்சாமி**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.08.2026.

குறுக்கு விசாரணை : ( 5,6 பிரதிவாதிகள் தரப்பில்)

1. யாருக்காக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்காக தாக்கல் செய்துள்ளேன்.

2. வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்ள ன்றால் தாவா பள்ளி அவர்களுக்கு வேண்டும் என தாக்கல் செய்துள்ளார்கள்.

3. தாவா பள்ளியில் நான் முகவராகவும், செயலாளராகவும் இருந்துள்ளேன் என்றால் சரிதான் எத்தனை ஆண்டுகள் என்றால் 17 ஆண்டுகள்.

4. யார் என்னை செயலாளராக நியமனம் செய்தார்கள் என்றால் பள்ளி கமிட்டி நியமனம் செய்யும்.

5. பள்ளி கமிட்டி சேர்ந்து ஏற்றப்படும் தீர்மானத்தை பள்ளி நிர்வாகம் தொடக்க கல்வி நிர்வாகத்திற்கு அனுப்பி அங்கு அங்கீகரிக்கப்படும் என்றால் சரிதான்.

6. தொடக்க கல்வி அலுவலர் எவ்வாறு அதில் முடிவு எடுப்பார் என்றால் நாங்கள் தீர்மானம் அனுப்பியதை பரிசீலனை செய்து மட்டுமே முடிவு எடுப்பார்.

7. பள்ளி கமிட்டியில் மொத்தம் எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்றால் 10 நபர்கள் உள்ளார்கள் தற்போது 7 நபர்கள் உள்ளார்கள். எத்தனை நபர்கள் எனக்கு ஆதரவாக உள்ளார்கள் என்றால் அனைவரும் எனக்கு ஆதரவாக உள்ளார்கள்.

8. அனைவரின் ஆதரவு அடிப்படையில் தான் என்னை பள்ளி நிர்வாகம் செய்ய அனுமதித்தார்கள் என்றால் சரிதான்.

9. 5,6 பிரதிவாதிகள் நேரடியாக பள்ளி நிர்வாகத்தை நியமிக்கமாட்டார்கள் என்றால் சரிதான்.

10. கோப்புகளின் அடிப்படையில் தான் நிர்வாகத்தினர் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றால் சரிதான்.

11. நான் செயலாளராக இருந்த போது வாதிகள் ஏதேனும் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை.

12. ஒரு பள்ளியின் நிர்வாகம் சம்மந்தப்பட்ட வழக்கு என்றும் ஆவணத்தின் அடிப்படையிலேயே 5,6 பிரதிவாதிகள் செயல்படுவார்கள் என்றும் அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரமுடியாது என்பதால் 5,6 பிரதிவாதிகள் அவசிய தரப்பினர்கள் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
தென்காசி